# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு கல்வி அமைச்சர் சுசில் அறிவித்தார்!

## புதிய திகதி அடுத்தவாரம் தெரியவரும்

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நவம்பர் மாதம் நடைபெறாது எனவும், அந்தப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று அவர் ஆற்றிய உரையின்போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய குறித்த பரீட்சையின் புதிய திகதி தொடர்பான அறிவிப்பை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அடுத்த வாரத்தில் உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி, குறித்த பரீட்சையை பிற்போடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், உயர்தரப் பரீட்சையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 22ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை நடத்துவதற்கான யோசனை-யையும் அவர் முன்வைத்திருந்தார்.

குறித்த யோசனை பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளருக்கு உள்ளது என்று கல்வி அமைச்சர் முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய, உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதுடன், அதன் புதிய திகதி குறித்த அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இன்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 04 வியாழக்கிழமை 21.09.2023 கதிர் 77







## கொக்குத்தொடுவாய் புதைகுழி முல்லைத்தீவில் போராட்டம்



கொக்குத்தொடுவாய்மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பாகச் சர்வதேச விசா ரணை முன்னெடுக்கப்படவேண்டும்! என்று கோரி, முல்லைத்தீவில் இன்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டமானது, இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்குச் சர்வதேச நீதிப் பொறிமுறையினை உறுதிப்படுத்துக, எனும்தொனிப்பொருளில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றிருந்தது.

2➤




## யாழில் சுகாதாரப் பணியாளர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆதார வை-த்தியசாலைகள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்களால் இன்று போதனா வைத்தியசாக்கு முன்பா-கக் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்-தினால் புத்திஜீவிகள் வெளியேறுவதை தடுப்பதிலும், அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு உள்ள தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும், தரமான மருந்-துகள் அரச வைத்தியசாலைகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கம் காட்டும் மெத்தனப் போ-க்கைக் கண்டித்தே இப்போராட்டமானது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

(04)

## கிளிநொச்சியில் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தினரின் போராட்டம் இன்று!

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சேவைச் சந்தை முன்பாக இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தற்பொழுது ஜெனிவாவில் நடைபெற்று வரும் இலங்கை தொடர்பான விவாதத்தின் போது, இலங்கை தொடர்பாக, இலங்கையின் கடைசி யுத்தத்தின்போது கையளிக்கப்பட்ட உறவுகள் வெள்ளைக்கொடியுடன் சென்று சரணடைந்தமை தொடர்பாக, பலவந்தமாகப் பிடிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பது பற்றிய




## தியாக தீபம் திலீபனின் ஆவணக் காட்சியகம் நல்லூரில் நாளை திறப்பு

தியாக தீபம் திலீபனின் வர லாற்றினை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகம் நாளை யாழ்ப் பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!! - என்னும் தொனிப்பொருளுடன் நாளை மாலை 6 மணிக்கு, நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலய முன்றலில், மாவீரர் பெற்றோர் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இந்த ஆவணக்காட்சியகம்திறந்து வைக்கப்படவுள்ளது.2➤

## ஸ்ரீலங்கா அரசிடம் தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்காது ஐ.நா சபையே அந்த நீதியைப் பெற்றுத் தர வேண்டும்!

## வளத்தாப்பிட்டி போராட்டத்தில் ஜெயசிறில் அறைகூவல் !

(வி.ரி.சகாதேவராஜா)

ஸ்ரீலங்கா அரசு இன்னமும் தமிழருக்கான நீதியைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் தர முடியாது - தரவும் மாட்டாது! எனவே, ஐ.நா. சபை இந்த நீதியைப் பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு, இன்று அம்பாறை மாவட்டம் வளத்தாப்பிட்டியில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பேசிய தமிழரசுச்சி முக்கியஸ்தரும் காரைதீவு முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அறைகூவல் விடுத்தார்.

வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் காத்தவராயன் காந்தன் தலைமையில் வளத்தாப்பிட்டியில் இடம்பெற்ற இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பதாகைகள் சகிதம் கலந்துகொண்டனர்.

அங்கு ஜெயசிறில் மேலும் பேசுகையில், நீதி தேவதை கண் திறக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை இந்தப் போர்க் குற்றவாளிகளைச் சர்வதேச2➤

## ரணில் இன்றிரவு ஐ.நாவில் உரை

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று உரையாற்றவுள்ளார்.

இலங்கை நேரப்படி இரவு 9.30 மணியளவில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சர்வதேச விசாரணைக்குத் தயார்! பிள்ளையான் சபையில் அறிவிப்பு



ஈஸ்டர்தாக்குதல்தொடர்பில்சர்வதேசவிசாரணைக்குத் தயாரென இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆரம்பமான விவாதத்தில் எதிர்க்கட்சி எம்.பி நிரோஷன் பெரேரா தெரிவித்த விடயங்களை மறுதலித்து கருத்து வெளியிட்ட பிள்ளையான், “என் மீது போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்த வேண்டாம்” - எனவும் கேட்டுக்கொண்டார். (அ)

# திருகோணமலையில் 22 ஆம் திகதி சுகாதாரப் பணியாளர் போராட்டம்

திருகோணமலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி சுகாதாரப் பணியாளர்கள், கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியத்துறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டம்முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இப்போராட்டத்தினை சுகாதாரச் சேவைத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக்கள் ,யக்கம் ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# கஜேந்திரன் எம்.பி. மீது தாக்குதல் சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு



திருகோணமலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 14 பேர் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - கொழும்பு வீதியினூடாகக் கடந்த 17ஆம் திகதி தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஊர்தியைக் கொண்டு செல்லும்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 14 பேர் மீது சிங்களவர்களால் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட்பட 6 பேரைக் கடந்த 18 ஆம் திகதி சீனக்குடா பொலிஸார் கைது செய்து திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவர்களுக்கு இன்று வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு இன்று திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை 6 சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் தொடர்ந்தும் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)




# தனுஷ்கவிற்கு எதிரான விசாரணை நிறைவு



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவிற்கு எதிரான வழக்கு விசாரணை நிறைவடைந்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை, அவுஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சாரா ஹகெட் முன்னிலையில் நடைபெற்றது.

வழக்கு விசாரணையின் தீர்ப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி வழங்கப்படும் என நீதிபதி சாரா ஹாகெட் தெரிவித்துள்ளார். (04)

## ஸ்ரீலங்கா அரசிடம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

தமிழர்களின் வரலாற்று அடையாளங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. தமிழர் பிரதேசங்கள் தொல்லியல் என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்புச் செய்யப்படுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டதற்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. மனித உரிமைகள் மீறப்படுகின்றதன. இவை எல்லாம் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மொத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும், என்றார்.

## கொக்குத்தொடுவாய் புதைகுழி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (04)

## தியாக தீபம் திலீபனின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. (01)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# நாட்டின் கல்வி முறைமை துரதிஷ்டவசமாக நல்ல தலைவர்களை உருவாக்க தவறிவிட்டது!

## கல்முனை பற்றிமா அதிபர் ரெஜினோல்ட்

(வி.ரி.சகாதேவராஜா)

துரதிஷ்டவசமாக நமது நாட்டில் உள்ள கல்வி முறைமை நாட்டுக்கு தேவையான நல்ல தலைமைத்துவங்களை உருவாக்கத் தவறிவிட்டது. அதனைச் சீர் செய்ய வேண்டியது ஆசிரியருடைய கடமையாகும்.

இவ்வாறு கல்முனையில் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தெரிவித்தார் .

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து அக்சன் யூனிட்டி லங்கா அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோயில் ஆகிய கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கற்பித்தல் அணுகுமுறை செயலமர்வை நடத்துகிறது.

ஏயூ லங்கா நிறுவன பிரதம நிறைவேற்று அலுவலர் கே.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த செயலர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நடைபெற்றது.

கூட்டத்தில் சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா பிரதி அதிபர் பா.சந்திரேஸ்வரன் ஆகியோர் சிறப்பதிதிகளாகக் கலந்து கொண்டார்கள்.

கௌரவ அதிதிகளாக எயூ லங்கா நிறுவனத்தின் கல்வி இணைப்பாளர் கே.சதீஸ்குமார், திட்ட முகாமையாளர் வி.சுதர்சன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஆசிரியர்கள் தங்களது அறிவை இற்றைப் படுத்திக்கோள்ள வேண்டும். தொடர்ச்சியாகக் கற்கின்ற ஆசிரியரே சிறந்த ஆசிரியர்.

ஓர் ஆசிரியனுக்குக் கிடைக்க கூடிய பெரிய திசயம் என்னவென்றால், அவன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் உள்ளத்தைத் தொட வேண்டும். அதுவே அவனது மிகப்பெரிய அடைதலாகும். பாடசாலைகளிலே தலைமைத்துவமும் உருவாக வேண்டும், என்றார்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோயில் ஆகிய வலயங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 ஆரம்பநெறி ஆசிரியர்கள் இந்த இரண்டு நாள் கற்பித்தல், கற்றல் அணுகுமுறைச் செயலமர்வில் பங்கு பற்றுகின்றனர்.

# தமிழ் மொழித் தினப் போட்டிகளில் மாவட்டத்தில் கல்முனை முதலிடம்

(நூருல் ஹுதா உமர்)

தமிழ் மொழித் தின 36 அரங்கப் போட்டிகளில் 14 முதலிடங்களை கல்முனை கல்வி வலயம் பெற்றுள்ளது.

அதில் நிந்தவூர் அஸ்-ஸபா வித்தியாலய எஸ். எச்.அம்மார் ஆக்கத்திறன் வெளிப்பாடு (பிரிவு 1), மருதமுனை அல்-ஹம்றா மகா வித்தியாலய அப்துல் சமட் ஹயானி பேச்சு (பிரிவு 4), நிந்தவூர் அஸ்-ஸபா வித்தியாலய ஏ.எச்.ஹனீப் முகம்மட் பாவோதல் (பிரிவு 1), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அ.தேஷ்மி பாவோதல் (பிரிவு 3), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி யு.அபர்ண சுவேர்தா பாவோதல் (பிரிவு-4), கல்முனை ஆர்.கே.எம். மகா வித்தியாலயம் சு.வேகாத்மி தனிஇசை (பிரிவு 2), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி செ.லக்ஸ்விகா குழுஇசை- 1, க.வகஸ்தமி, சி.கேதுஜா, செ.லபோனிகா, பா.போட்சனா, சி.அபிரக்ஸ ினி, கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி சு.அகஸ்ரி தனிநடனம் (பிரிவு 3), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி குழு நடனம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி நாட்டிய நாடகம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி வில்லுப்பாட்டு, நிந்தவூர் அல்-அஷ்ரக் முஸ்லிம் மகா வித்தியாலயம், தமிழறிவு வினாவிடை, நிந்தவூர் அல்-அஷ்ரக் முஸ்லிம் மகா வித்தியாலயம் முஸ்லிம் நிகழ்ச்சி, காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம் நவீன நாட்டுக்கூத்து ஆகியவற்றில் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

இப்போட்டிகளின்படி திருக்கோவில் கல்வி வலயம் 10 இடங்களைப் பெற்று இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளதுடன், தலா 6 இடங்களைப் பெற்று அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய கல்வி வலயங்கள் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன. ஏற்கனவே நடந்து முடிந்த மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் 6 முதலிடங்களைப் பெற்ற கல்முனைக் கல்வி வலயமானது மாவட்டத்தில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 26 ஆம் திகதி திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் மாகாண மட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

அதிகமான முதலிடங்களைப் பெற்று தேசிய மட்டத்திற்கு கல்முனை கல்வி வலயம் முன்னேற கல்முனை கல்வி வலயத்திற்கான தமிழ் மொழித் தினப் போட்டிகளின் தலைவராக இருந்து வழி நடத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் அவர்களுக்கு தமிழ் மொழிப் பிரிவின் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் தமிழ் மொழித் தினக் குழுவின் ஆலோசகர்- உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால், செயலாளர்- வளவாளர் ஜெஸ்மி எம்.மூஸா, இணைப்பாளர் க.குணசேகரம் ஆகியோருக்கும் மாணவர் தயார்படுத்தலில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்களுக்கும் மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக கல்முனை வலயக்கல்வி அலவலக தமிழ் மொழித் தின செயலாளர் தெரிவித்துள்ளார்.

# கோப்பாய் கலாசாலையில் ஆங்கில தினம் பரீட்சை ஆணையாளர் பிரதம விருந்தினர்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்தும் நூற்றாண்டு கால ஆங்கிலத் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதாவும் சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும் கௌரவ விருந்தினராக கலாசாலையின் முன்னாள் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி எம்.ஜே.எஸ். முத்துக்குமாரசாமி யும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆங்கில தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# பொருளாதார விடயங்கள் குறித்து ரணில் - கிறிஸ்டலினா பேச்சு!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுக்கு இடையில் சந்திப்பு இடமபெற்றுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடருக்காக அங்கு சென்றிருக்கும் ஜனாதிபதி ரணில், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரைச் சந்தித்து

முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது, நிதித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (04)




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
A1
Chrysalis
Catalyzing change
ஊடாக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# ஐ.நா. பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பினராக இந்தியாவுக்கு ஆதரவைத் தெரிவித்தது இங்கிலாந்து



இங்கிலாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் கிளெவர்லி ஐ.நா.வின் வெளிநாட்டு உறவுகளுக்கான சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும போது, ஐ.நா. பாதுகாப்புச் சபை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்திருக்கிறார்.

நிகழ்வில் ஆரம்ப உரையாற்றிய அவர், உலகம் நமக்கு முன் வைத்துள்ள சவால்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. ஆனால், நேரான வளர்ச்சிகளைக் காண்பதற்கான வாய்ப்பும் நம்மிடம் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை நாம் மீண்டும் அடைவதற்கான சந்தர்ப்பங்களும் எமக்கு இருக்கின்றன.

இதற்காக, நம்முடைய பாரம்பரிய நண்பர்கள் மற்றும் கூட்டணி நாடுகளுடன் நாம் இணைந்து பணியாற்ற வேண்டும். ஆனால், உலகில் எழுச்சி பெற்று வரும் சக்தி படைத்த நாடுகளுக்காகவும் நாம் குரல் கொடுக்க வேண்டும் என அவர் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என இங்கிலாந்து ஊக்குவித்து வருகிறது. இதன்படி, இந்தியா, பிரேசில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஐ.நா.வின் நிரந்தர உறுப்பினர்களாக வேண்டும் என்று நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். உலக அரங்கில் ஓர் உயர்ந்த குரலாக இடம்பெற உண்மையில் ஆபிரிக்காவும் தகுதி வாய்ந்ததே, எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (04)

## சூடான் கலவரத்தில் அப்பாவி பொதுமக்கள் உட்பட 10 பேர் பலி



ஆபிரிக்க நாடான சூடானில் ராணுவ ஆட்சி நடக்கிறது. அந்த நாட்டின் முன்னாள் ராணுவத் தளபதியாக இருந்தவர் ஒகோனி ஒக்வோம் ஒடோ. கடந்த மே மாதம் அவர் பணியாற்றி வந்த போச்சலா நகரில் இருந்து வேறு இடத்துக்கு பணிமாறுதல் அளித்து ராணுவ அரசு உத்தரவிட்டது. இதனை விரும்பாத ராணுவ அதிகாரி ஒடோ தலைமறைவானார்.

இந்தநிலையில், போச்சலாவில் இருந்து கொண்டு ஆட்சிக்கு எதிராகப் படைகளைத் திரட்டுவதாக ஒடோ மீது புகார்கள் எழுந்தன. அதன்பேரில் ஒடோவைக் கைது செய்ய ராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டது.

கைது நடவடிக்கையின் போது ஒடோவை பொலிசார் சுட்டுக்கொன்றனர். இதனால், அங்குள்ள பொதுமக்கள் ராணுவத்தின் நடவடிக்கையைக் கண்டித்துப் போராட்டத்தில் குதித்தனர். அதைத்தொடர்ந்து, அங்கு வன்முறை வெடித்துக் கலவரமாக மாறியது.

கலவரத்தை ஒடுக்க ராணுவத்தினர் முயன்றனர். இந்த நடவடிக்கையில், அப்பாவிப் பொதுமக்கள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## பிரேசில் அதிபருடன் முதல் முறையாக உக்ரைன் அதிபர் நியூயோர்க்கில் சந்திப்பு

### இருதரப்பு உறவுகள் பற்றி ஆலோசனை

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த 78 ஆவது ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் உறுப்பு நாடுகள் கலந்து கொண்டன. இந்தக் கூட்டத்தொடரில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கலந்து கொண்டு பேசினார். அவர் பேசும்போது, உக்ரைனில் ரஷ்யா இனப்படுகொலையில் ஈடுபடுகிறது என குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ரஷ்யா பல விடயங்களை ஆயுதங்களாக மாற்றி, தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. அந்த விடயங்கள் எங்களுடைய நாட்டுக்கு எதிராக மட்டுமின்றி, உங்களுக்கும் (ஐ.நா. பொது சபை உறுப்பு நாடுகள்) கூட எதிராக பயன்படுத்தப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பயங்கரவாதிகளுக்கு அணு ஆயுதங்களை வைத்திருக்க எந்த உரிமையும் இல்லை என்றும் அவர் ரஷ்யாவைச் சாடியிருந்தார்.

இந்த நிலையில், அங்கே பிரேசில் நாட்டு அதிபரான லூயிஸ் இனேசியோ லூலா டா சில்வாவை, ஜெலன்ஸ்கி நேரில் சந்தித்து உரையாடியிருந்தார். அப்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கான பாதையை வகுப்பதன் முக்கியத்துவம் மற்றும் பேச்சுவார்த்தைகளை மேம்படுத்துவது ஆகியவை பற்றி இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

இரு நாடுகளின் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கொள்வது இது முதல்முறை என்று சி.என்.என். செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. லூலாவுடனான இந்தச் சந்திப்பு, நேர்மையாகவும் பயனுடைய ஒன்றாகவும் இருந்தது என ஜெலன்ஸ்கி கூறினார்.

இந்தச் சந்திப்பை அடுத்து, இருதரப்பு உறவுகள் மற்றும் அமைதி முயற்சிகளில் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் பணியாற்றும்படி எங்களுடைய தூதரகக் குழுவினரை அறிவுறுத்தி உள்ளோம், என்றும் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார். (04)

## ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரிப்பு



இந்தியா, நேபாள நாடுகளில் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சர்வதேச காண்டாமிருக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் காண்டாமிருக தினத்தை (செப். 22) முன்னிட்டு 'உலக நாடுகளில் காண்டாமிருகத்தின் நிலை 2023' என்ற அறிக்கையை சர்வதேச காண்டாமிருக அமைப்பு அண்மையில் வெளியிட்டது.

அந்த அறிக்கையில், 'காண்டாமிருகத்தின் கறுப்பு, வெள்ளை, ஒற்றைக்கொம்பு, சுமத்ரன், ஜாவன் ஆகிய ஐந்து இனங்களும் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வருகின்றன. இந்தியாவில் 3,262 காண்டாமிருகங்கள் உள்ளன. இந்த வருடத்தில் காசிரங்கா மற்றும் மனஸ் தேசியப் பூங்காக்களில் இரண்டு காண்டாமிருகங்கள் வேட்டையாடப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்தியா, நேபாளம், பூடான் ஆகிய நாடுகளின் எல்லை தாண்டிய காண்டாமிருகங்களைப் பாதுகாக்கும் மேலாண்மை ஒப்பந்தம், வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம், கடந்த தசாப்தத்தைவிட காண்டாமிருகங்களின் எண்ணிக்கை 20 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்தோனேசியாவில் 12 வெள்ளைக் காண்டாமிருகங்களைப் பற்றிய தகவல் இல்லாமல் போய்விட்டது. இதேபோல் கறுப்புக் காண்டாமிருகங்கள் அதிகம் வாழும் நமீபியா நாட்டில் இவ்வினங்களை வேட்டையாடும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

தொடர்ந்து வேட்டைக்கு உட்பட்டாலும் கறுப்புக் காண்டாமிருக இனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. காண்டாமிருக இனங்கள் அழிந்து வருவதற்கு வேட்டையாடுதல், வாழ்விடம் இழப்பு, காலநிலை மாற்றம் ஆகியவை முக்கிய காரணங்களாக உள்ளன.

ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள வறட்சி, வறுமை, ஆசிய நாடுகளில் காலநிலை மாற்றத்தால் அதிக அளவிலான மழை பொழிந்து ஏற்படும் வெள்ளம் போன்றவற்றால் காண்டாமிருக இனங்கள் அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# தாயிலிருந்து சிசுவிற்கு எச்ஐவி, சிபிலிஸ் பரவலைத் தடுப்பதற்கான கருத்தரங்கு



(நூருல் ஹுதா உமர்)

தாயிலிருந்து சிசுவிற்கு எச்ஐவி, சிபிலிஸ் ஆகியன பரவுவதனைத் தடுப்பதற்கான செயற்றிட்டம் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார தாதியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிராந்திய பாலியல் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, சூம் தொழிநுட்பத்தின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்கள் தலைமை உரையாற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

தாயிலிருந்து சிசுவிற்கு எச்ஐவி, சிபிலிஸ் ஆகியன பரவுவதனைத் தடுத்தல், குறித்த நோயாளர்களுக்கான சிகிச்சை மற்றும் பரிசோதனைகள், குறித்த நோய் தொடர்பிலான விழிப்புணர்வு வேலைத்திட்டம் தொடர்பாகவும் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் பியூமி பெரேரா இந்நிகழ்வின் போது பிரதம வளவாளராகக் கலந்துகொண்டு விரிவுரையாற்றியதுடன், பாலியல் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.என்.எம்.தில்ஷான், தொற்றுநோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எ.எம்.ஹில்மி ஆகியோரும் இந்நிகழ்வில் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

# இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்களான தந்தையும், மகளும் நோர்வே தேர்தலில் வெற்றி

(கலாபூஷணம் பரீட் இக்பால் - யாழ்ப்பாணம்)

ஒஸ்லோ தேர்தலில் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தந்தையும் மகளுமான அனீஸ் ரவூப், தமீனா ஷரீப்டீன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த எம்.சி. ரவூப் என்பவரின் மகனும் பேத்தியுமாவார்கள்.

எம்.சி.ரவூப், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஜோன் கீல்ஸ் ஆகிய நிறுவனங்களில் நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

தந்தையும் மகளும் இருவேறு பிரதான கட்சிகளான கொன்சர்வேட்டிவ் கட்சியிலும், தொழிலாளர் கட்சியிலும் களமிறங்கியிருந்தார்கள்.

தனது தேர்தல் வெற்றி குறித்து, தொழிலாளர் கட்சியில் போட்டியிட்ட தமீனா கருத்துக் கூறுகையில், நான் ஒஸ்லோவை இன்னும் சிறந்த, பாதுகாப்பான மற்றும் பசுமையான நகரமாக மாற்றுவதற்குப் போராடுவதற்கு பெரிய திட்டங்களை வைத்திருக்கிறேன். எனக்கு வாக்களித்த சகலருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன், என குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு தரப்பினரின் ஆதரவைப் பெற்றுள்ள தமீனா, நோர்வே தொழிலாளர் கட்சியின் ஆவோசகராகவும் பணியாற்றி வருகிறார்.

கொன்சர்வேட்டிவ் கட்சியே இரு சபைகளிலும் வென்று ஆட்சியமைக்கவுள்ளமையால், தமீனா எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தாலும் - அவர் பல்சமூக இளைஞர்கள் மத்தியில் மிக பிரபலம் பெற்று இருப்பதாலும், மிக சுறுசுறுப்பாக இயங்கும் தன்மையாலும் - வீச்சுடன் காரியமாற்றக்கூடியவராகக் கருதப்படுகிறார்.

அதனால்தான் கட்சி அவரை இத்தேர்தலுக்கு ஆலோசகராகவும், பிரசாரப் பொறுப்பாளராகவும் நியமித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபத்தைந்து வயதான தமீனா ரவூஃப், ஒஸ்லோ பல்கலைக் கழகத்தில் உயிர் நுண்ணியல் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவரும் சுற்றுச்சூழல், பசுமைப் புரட்சி முன்னேற்றம், அபிவிருத்தி என பல துறைகளிலும் மிக ஈடுபாட்டுடன் செயல்படுபவர் எனவும் நன்கறியப்பட்டவர்.



அவர் தேர்தலில் வெற்றி பெற்றதும் அக்கட்சியின் தலைவர் - "எதிர்காலத்தில் ஆட்சியமைக்கும் நமது அரசாங்கத்தில் நீங்கள்தான் சுற்றுச்சூழல் அமைச்சர் என இப்பொழுதே வாழ்த்தியிருப்பதானது - தமீனா கட்சி அடையாளம் கண்ட ஒரு பெண் ஆளுமையாக விளங்குகிறார் என்பதை அறிய முடிகிறது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனான அனீஸ் ரவூஃப் - சமூக மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர் என்பதுடன், வடமாகாண முஸ்லிம்கள் நிலைமைகள் குறித்து ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பில் யாழ். புலம்பெயர்ந்த முஸ்லிம் போரம் சார்பில் தலைமை தாங்கி பங்குபற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.




## தேசிய மட்டத்துக்குத் தெரிவான மாணவர்களுக்குக் கௌரவம்

(நூருல் /ஹுதா உமர்)

கல்வி அமைச்சினால், அண்மையில் நடத்தப்பட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டியில், மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நேற்று அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின்காலை ஆராதனையின் போது மாகாண மட்டத்தில், படைப்பாக்க எழுத்துப் போட்டியில் முதலிடம் பெற்ற தரம் 9 இனைச் சேர்ந்த சி. ஆர்.மாக் அஹ்மத், மாகாணப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற தரம் 13 இனைச் சேர்ந்த என். பாத்திமா அறூாப், சிரேஸ்ட நாடகப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த நாடக் குழுவினர்களுக்கான பதக்கங்கள், கல்லூரி முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் ஆசிரியர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த மாகாணப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இம்மாதம் இடம்பெறும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

# ரஷ்யாவை எதிர்ப்பதற்கு

# உக்ரைனுக்கு யுரேனிய ஆயுதங்களை வழங்க வேண்டாம்!

## ஐ.நா. சிறப்பு அதிகாரி அலைஸ் ஜில் வலியுத்துகிறார்

உக்ரைனுக்கு சர்ச்சைக்குரிய 'யுரேனிய சக்கை'யைக் கொண்டு உருவாக்கப்பட்ட பீரங்கிக் குண்டுகளை அளிக்க வேண்டாம் என்று அமெரிக்காவிடம் ஐ.நா. சிறப்பு அதிகாரி அலைஸ் ஜில் எட்வர்ட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அமெரிக்க அரசுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ரஷ்யாவுடனான போரில் பயன்படுத்துவதற்காக உக்ரைனுக்கு யுரேனிய சக்கையால் உருவாக்கப்பட்ட பீரங்கிக் குண்டுகளை அனுப்பும் முடிவை அமெரிக்க அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். அத்தகைய ஆயுதங்களைப் போரில் பயன்படுத்துவது ராணுவ வீரர்கள் மட்டுமின்றி அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களையும் மிகக் கடுமையாக பாதிக்கும்.

போர் முடிந்த பிறகும் கூட அந்த ஆயுதங்களால் பொதுமக்களுக்கு ஆபத்து நீடிக்கும். எனவே, யுரேனிய சக்கையால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தவே கூடாது, என்று எச்சரித்துள்ளார்.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த நாட்டின் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்யா படையெடுத்தது. தற்போது கிழக்கு உக்ரைனின் கணிசமான பகுதிகளை ரஷ்யப் படையினரும், ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களும் கைப்பற்றியுள்ளனர்.

அவர்கள் மேலும் முன்னேறிச் செல்வதைத் தடுப்பதற்கும், ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து உக்ரைன் பகுதிகளை மீட்பதற்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்குப் பல்வேறு ராணுவ உதவிகளை அளித்து வருகின்றன. அத்தகைய உதவிகள் மூலம் அந்த நாடுகள் போரில் நேரடியாக ஈடுபடுவதாக ரஷ்யா குற்றம் சாட்டி வரும் நிலையிலும், சக்திவாய்ந்த பீரங்கிகளில் பயன்படுத்துவதற்காக சர்ச்சைக்குரிய யுரேனிய சக்கையால் தயாரிக்கப்பட்ட குண்டுகளை அனுப்பவிருப்பதாக பிரிட்டன் கடந்த மார்ச் மாதம் அறிவித்தது.

இதற்குக்கடும்கண்டனம்தெரிவித்த ரஷ்யா, தங்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக, சர்ச்சைக்குரிய யுரேனியச் சக்கையைக் கொண்டு உருவாக்கப்பட்ட பீரங்கி எதிர்ப்புக் குண்டுகளை உக்ரைனுக்கு அனுப்பும் பிரிட்டனின் முடிவு இருதரப்பு தூதரக உறவில் கடுமையான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், உக்ரைனில் இந்த மாதம் 7 ஆம் திகதி சுற்றுப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்டனி பிளிங்கனும், யுரேனியச் சக்கையைக் கொண்டு உருவாக்கப்பட்ட பீரங்கிக் குண்டுகளை உக்ரைனுக்கு அளிக்கவிருப்பதாக அறிவித்தார்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் தனது சக்திவாய்ந்த எம்-1 அப்ரம்ஸ் பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அந்தப் பீரங்களில் பயன்படுத்துவதற்காகவே யுரேனியச் சக்கையால் தயாரிக்கப்பட்ட 120 எம்எம் குண்டுகளை உக்ரைனுக்கு அளிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.



இந்த நிலையில், அத்தகைய ஆயுதங்களை உக்ரைனுக்கு அனுப்ப வேண்டாம், என்று ஐ.நா. சிறப்பு அதிகாரி அலைஸ் ஜில் எட்வர்ட்ஸ் தற்போது வலியுறுத்தியுள்ளார்.

அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்காக யுரேனியத்தை அதிகபட்ச அளவில் செறிவூட்டிய பிறகு கடைசியாகக் கிடைக்கும் பொருளை யுரேனியச் சக்கை என்கிறார்கள். இந்தப் பொருள் மிகக் குறைந்த கதிர்வீச்சையே வெளிப்படுத்தும் என்று ஐ.நா. அணுசக்திக் கண்காணிப்பு அமைப்பான ஐஏஇஏ கூறுகிறது.

யுரேனியச் சக்கையின் மிக அதிகமான அடர்த்தி காரணமாக, அதனைக்கொண்டு ராணுவத்தளவாடங்களில் கவசத் தகடுகளை உருவாக்க முடியும். இருந்தாலும், கவசத் தகடுகளை ஊடுருவித் தகர்க்கும் குண்டுகளை உருவாக்கவே அது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. எனினும், கதிர்வீச்சை வெளிப்படுத்தும் அந்தப் பொருளைக் கொண்டு ராணுவ தளவாடங்கள் தயாரிப்பதை ஒரு பிரிவினர் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது. (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# வெள்ளிக்கிழமை சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கள் பெரும் போராட்டம்



அரசுக்கு எதிராக வெள்ளிக்கிழமை மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்!, என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களும் ஏனைய சில தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன.

“சுகாதார சேவைகள் ஆபத்தில்” என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் உறுப்பினர் வைத்தியர் ஜெயந்த பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“தேசிய விரோத தினமாக செப்டெம்பர் 22ஆம் திகதியை நாம் பிரகடனப்படுத்துவதுடன், அனைத்து வைத்தியசாலைகள் முன்பாகவும் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு இது தொடர்பில் விளக்கமளித்துள்ளோம். நாட்டின் சுகாதாரத்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக தான் நன்கு அறிந்துள்ளதாக அவர் கூறியதுடன், எமது போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

நாட்டு மக்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் பாதுகாக்கும் நோக்கில் போராட்டங்களை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என நாட்டு மக்களுக்குத் தெரியும். அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சுகாதாரக் கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக் கூறினோம். ஆனால், மக்களின் சுகாதாரம் தொடர்பில் அவர்களுக்குத் துளியளவும் அக்கறையில்லை.

அரசியல்வாதிகளுக்கு இந்த வைத்தியசாலைக் கட்டமைப்பு அவசியமில்லாவிடினும் நாட்டு மக்களுக்கு இது அவசியமாகும். ஆகவே, 22ஆம் திகதி அரசுக்கு மீண்டுமொருமுறை தெளிவாக இந்த விடயத்தை உணர்த்தவுள்ளோம்.” - என்றார்.

இலங்கை தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் எஸ்.டி.மெதிவத்த கருத்து வெளியிடுகையில்,

“நாட்டு மக்கள், விவசாய, கல்விசார், சுகாதாரத்துறை மற்றும் நாட்டின் பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்களின் ஆதரவு இந்தப் போராட்டத்துக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்க அனைவரும் அரசின் மோசமான செயற்பாடுகளுக்கு எதிராக அணிதிரள வேண்டும்.” - என்றார். (அ)

# திலீபனின் நினைவு ஊர்தி தாக்கப்பட்டமைக்கு பிரித்தானிய ஈழத் தமிழர் பேரவை கண்டனம்

தியாக தீபம் திலிபனை நினைவு கூர்ந்து முன்னெடுக்கப்பட்ட ஊர்திப் பவனியும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் தாக்கப்பட்டமைக்கு பிரித்தானியாவின் ஈழத் தமிழர் பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.

பெரும்பான்மையினத்தவர்கள் ஈழத் தமிழர்களுடன் சேர்ந்து வாழ மறுக்கும் நிலைமையை இந்தத் தாக்குதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய ஈழத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அமைதிப் போராட்டங்களுக்கும் நினைவு நிகழ்வுகளுக்கும் தடை ஏற்படுத்தக்கூடாது என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ள போதிலும், இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமைக்கு இலங்கை அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இது வரையில் முன்னெடுக்காமை கவலையளிக்கின்றது எனவும குறித்த பேரவை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஈழத் தமிழர்கள் இறைமையுடன் கூடிய தன்னாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கும், சட்ட ஒழுங்குகளுக்கு அமைய ஜனநாயக ரீதியில் வாழ்வதற்குமான நடவடிக்கைகளை ஐ.நா மனித உரிமை ஆணையகம் ஏற்படுத்த வேண்டும், எனவும் பிரித்தானியாவின் ஈழத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது. (04)

# விலையைக் குறைக்காவிட்டால் கோழி இறைச்சி இறக்குமதி!

கோழி இறைச்சியின் விலை குறைப்பு குறித்து வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் கோழி உற்பத்தியாளர்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

சந்தையில் தற்போது 1250 ரூபாயாக விற்பனை செய்யப்படும் கோழி இறைச்சியின் விலை 200 ரூபாவினால் குறைக்கப்பட வேண்டுமென அமைச்சர் நளின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய கலந்துரையாடலில் கோழி இறைச்சியின் விலையை 200 ரூபாயினால் குறைப்பதற்கு கோழி உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவிப்பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இல்லாவிடின், கோழி இறைச்சியை இறக்குமதி செய்வது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (04)

# சுங்கச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்ட 133 வாகனங்களின் கோப்புகள் மாயம்




சுங்க விசாரணைகளின் போது கைப்பற்றப்பட்ட 435 வானங்கள் மற்றும் 91 கொள்கலன்கள் ஆகியன இந்த வருடம் ஜனவரி 31ஆம் திகதியின் போது தனியார் நிறுவனமொன்றிடம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட பகுதியொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இதில் 261 வாகனங்கள் மற்றும் 86 கொள்கலன்கள் சுமார் 5 வருடங்களுக்கும் மேல் இப்பகுதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. இந்த வாகனங்கள் சம்பந்தமான கோப்புகள் மாயமாகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுங்கத்தினால் கைப்பற்றப்பட்ட அல்லது வேறு நிறுவனங்களினால் சுங்கத்திற்கு கையளிக்கப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் ஆகியன ஏலம் விடப்படவோ அப்புறப்படுத்தும் வரையிலோ சுங்கத்தின் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதற்காகவே 18,000 சதுர அடி நிலப் பரப்பைக் கொண்ட மேற்குறிப்பிட்ட இடப்பகுதி தனியார் நிறுவனமொன்றிடம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு முதல் 2020 வரை மட்டுமே சுங்கத்தினால் மேற்படி தனியார் நிறுவனத்துடனான வாடகை ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2023 ஜனவரி வரையில் 5 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலத்தை நீடித்தவாறு இந்த வாடகைப் பகுதி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது, என கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஜனவரி வரையில் தனியார் நிறுவனத்திற்கு செலுத்திய மற்றும் செலுத்த வேண்டிய மொத்த வாடகை தொகை 77,485,548 ரூபா எனவும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5 வருடங்களுக்கும் மேல் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்த வாகனங்கள் குறித்து, தாமதமின்றி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கணக்காய்வின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ரெ- 17)

# பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளரை சந்தித்தார் ஜனாதிபதி!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லண்டை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் வைத்து பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்தை ஜனாதிபதி சந்தித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கும் பொதுநலவாயச் செயலகத்திற்கும் இடையில் இடம்பெற்று வரும் ஒத்துழைப்பின் முக்கிய அம்சங்கள் குறித்துப் பேசப்பட்டுள்ளன.

மேலும், கடந்த ஆண்டு ருவாண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் போது தலைவர்கள் எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆராய்ந்தனர், எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2023இல் வெளியிடப்பெற்றது.